**செ.வெ.எண்: 225** **நாள்: 11.04.2025**

# புதுக்கோட்டை மாவட்டம்

## பத்திரிகைச் செய்தி

---

புதுக்கோட்டை மாவட்டத்தில் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் கீழ் செயல்படும் பள்ளி சத்துணவு மையங்களில் காலியாக உள்ள 345 சமையல் உதவியாளர்கள் பணியிடங்கள் நேரடியாக நியமனம் செய்யப்பட உள்ளன. புதுக்கோட்டை மாவட்டத்தில் ஊராட்சி ஒன்றியங்கள் வாரியாக நேரடி நியமனம் செய்யப்படவுள்ளதால் விண்ணப்பதாரர்கள் சம்மந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் மற்றும் புதுக்கோட்டை மாநகராட்சி அலுவலகங்களில் 15.04.2025 முதல் 28.04.2025 வரை காலை10.00 மணி முதல் மாலை 5.45 மணிக்குள் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்களை https://Pudukkottai.nic.in என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்துக் கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

காலிப்பணியிடங்கள் மற்றும் இனசுழற்சி சம்மந்தமான விவரங்களை சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியம்/ புதுக்கோட்டை மாநகராட்சி அலுவலகம் விளம்பர பலகையில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளதை தெரிந்து கொள்ளலாம்.

தொகுப்பூதியத்தில் பணிநியமனம் செய்யப்படும் சமையல் உதவியாளர்கள் தொடர்ந்து பன்னிரெண்டு மாத காலம் பணியினை முடித்த பின், சிறப்பு காலமுறை ஊதியத்தின் கீழ் ஊதியம் பெறுவர்.

| ஊதியம் விவரம் | சமையல் உதவியாளர் பதவி |
|---|---|
| தொகுப்பூதியம் மாதமொன்றுக்கு | ரூ.3000/- |
| பன்னிரெண்டு மாத காலத்திற்கு பின் வழங்கப்படும் சிறப்பு காலமுறை ஊதியம் மாதமொன்றுக்கு | ரூ.3000-9000 என்ற ஊதிய விகிதம் |

**<u>தகுதிகள்</u>**

**இப்பணியிடங்களுக்கு பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்க தகுதியானவர்கள்**

| வ. எண் | பொருள் | சமையல் உதவியாளர் பணியிடம் |
|---|---|---|
| 1 | இனம் | பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்க தகுதியானவர்கள் |
| 2 | கல்வி | பொதுப்பிரிவினர், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் 10 ஆம் வகுப்பு தேர்ச்சி (அ) தோல்வி |
| 3 | மொழி | தமிழ் சரளமாக எழுதப்படிக்க தெரிந்திருக்க வேண்டும் |

| வ.எண் | பொருள் | சமையல் உதவியாளர் பணியிடம் |
|---|---|---|
| 4 | வயது மற்றும் இதர தகுதிகளின் நிர்ணயம் எந்த தேதியில் அறிவிப்பு வெளியிடப்படுகிறதோ அந்த தேதியினை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்பட வேண்டும். | ➢ பொதுப்பிரிவினர் மற்றும் தாழ்த்தப்பட்டோர்களுக்கு 21 வயது பூர்த்தியடைந்தும், 40 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும்.<br>➢ பழங்குடியினர் 18 வயது பூர்த்தியடைந்தும், 40 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும்.<br>➢ விதவைகள், கணவரால் கைவிடப்பட்டோர் 20 வயது பூர்த்தியடைந்தும் 40 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும். |
| 5 | தூரச் சுற்றளவு | நியமன பணியிடத்திற்கும் விண்ணப்பதாரர் குடியிருப்புக்கும் இடையே உள்ள தூரம் 3 கி.மீ.குள் இருக்க வேண்டும். (ஊராட்சி-குக்கிராமம்-வருவாய் கிராமம் போன்றவைகள் கணக்கில் எடுத்துக் கொள்ள தேவையில்லை) |
| 6 | விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டிய சான்றிதழ்கள் | ➢ பள்ளி மாற்றுச்சான்றிதழ்<br>➢ SSLC மதிப்பெண் சான்றிதழ்<br>➢ குடும்ப அட்டை<br>➢ இருப்பிட சான்று<br>➢ ஆதார் அட்டை<br>➢ சாதிச்சான்று<br>➢ விதவை, கணவரால் கைவிடப்பட்டோர் மற்றும் ஆதரவற்ற பெண்கள் சான்றிதழ்<br>➢ மாற்றுத்திறனாளிகள் (அடையாளஅட்டை) |
| 7 | விண்ணப்பம் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் | 28.04.2025 |

**மாற்றுத்திறனாளிகள் ஒதுக்கீட்டில் 4% இடஒதுக்கீட்டில் கீழ்கண்ட குறைபாடுகள் உள்ளவர்கள் மட்டும் (உரிய அடையாள அட்டையுடன்) விண்ணப்பிக்க வேண்டும்.**

- குறைவான பார்வை திறன் (மூக்கு கண்ணாடி மூலம் பார்வை சரி செய்யப்பட்டது)
- உடல் இயக்க குறைபாடு (ஒரு கால்)
- குணப்படுத்தப்பட்ட தொழுநோய் (40% கைகளில் முழு செயல்பாட்டு திறன், உணர்திறன் மற்றும் செயல்திறன் உள்ளடக்கியது)
- திரவ வீச்சினால் பாதிக்கப்பட்டவர்
- குறிப்பிட்ட கற்றல் திறன் குறையாடு (மிதமான)

**விதவைகள், கணவரால் கைவிடப்பட்டோர் மற்றும் ஆதரவற்ற பெண்களுக்கு 25% இடஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

காலிப்பணியிடங்களுக்கு விண்ணப்பிக்கும் போது உரிய விண்ணப்பத்தினை காலிப்பணியிட பள்ளி சத்துணவு மையம் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றியங்கள்/ புதுக்கோட்டை மாநகராட்சியில் மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும்.

முன்னுரிமை பிரிவினர் கல்வித்தகுதி, வயது, இருப்பிடம், சாதி மற்றும் முன்னுரிமை சம்மந்தமான ஆவணங்களான ஆதரவற்ற விதவை, கணவனால் கைவிடப்பட்டோர், ஆதரவற்ற பெண் (தாய்/தந்தை இறப்புச் சான்று) மற்றும் மாற்றுத்திறனாளிகள் அடையாள அட்டை கலப்புத் திருமணம் மேற்கொண்டவர், முன்னாள் இராணுவத்தினர்/ இராணுவத்தில் பணிபுரிபவர்களையும் சார்ந்தோர், பர்மா/ இலங்கை அகதிகள், அரசுக்கு நிலம் அளித்தவர்கள், தமிழ்மொழி காவலர்களின் குடும்பங்கள், முன்னாள் மக்கள் தொகை கணக்கு எடுப்பு பணியில் ஈடுபட்டவர்கள், விடுதலை போராட்ட வீரர்களின் வாரிசுதாரர் ஆகியோர்கள் தகுதிகளுக்கு ஆதாரமாக **நேர்காணலின் போது அசல் சான்றிதழ்களுடன் கலந்து கொள்ள வேண்டும்.**

அஞ்சல் துறையின் மூலம் விண்ணப்பங்கள் அனுப்பப்படும்போது ஏற்படும் காலதாமங்களுக்கு துறை பொறுப்பேற்காது. மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திற்கு நேரடியாகவோ மற்றும் தபால் மூலமாகவோ வரப்பெறும் விண்ணப்பங்கள் நேர்காணலுக்கு பரிசீலனை செய்யப்படமாட்டாது.

மேலும் நியமன அறிவிப்பு அறிக்கையினை காரணம் ஏதும் குறிப்பிடாமல் இரத்து செய்வதற்கு/ திரும்ப பெறுவதற்கு/ திருத்துவதற்கு/ கெடு தேதியினை நீட்டிப்பதற்கு மாவட்ட ஆட்சியருக்கு முழு உரிமையுண்டு.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**


புதுக்கோட்டை மாவட்ட செய்திகளை உடனுக்குடன் தெரிந்துக்கொள்ள:

Pro Pudukkottai PRO PDKT @PRO_Pudukkottai Pro.Pudukkottai